# ஐயர் வாக்குப் பலித்தது

## ஐயர் வாக்குப் பலித்தது

வைதிகப் பிடுங்கல் கேசவப் பிள்ளைக்கு வயது 65க்கு மேலாகிறது. அவருடைய சிங்காரம் பிள்ளை என்ற குமாரர் தம் மனைவி மக்களுடன் தகப்பனார் வீட்டிலேயே வசித்து வந்தார். சிங்காரம் பிள்ளைக்குச் சுயமரியாதையில் சிறிது நம்பிக்கையுண்டு. ஒருநாள் தம் தகப்பனாரிடம் பேசிக்கொண்டு இருந்த ராகவய்யரிடம் சிங்காரம் பிள்ளை குறும்பாய்ப் பேசிய தென்னமோ வாஸ்தவந்தான். ராகவய்யர் கோபத்தால் ஒருவரைச் சபித்தாலும் சந்தோஷத்தால் ஒருவரை அநுகிரஹித்தாலும் அது பலித்துவிடும். குறும்பாகப் பேசியதற்காகச் சிங்காரம் பிள்ளையை அய்யா ஏது - ஏது இந்தப் பையன் அற்பாயிசுக்காரன் என்று கடுகடுத்தார். குறும்புப் பையனுடைய தந்தை கேசவப் பிள்ளை பாவம் அசந்து போய் விட்டார். பின்னர்ப் பெருமூச்செறிந்தார். ஐயரைப் பார்த்துக் கிழவர் ‘ஸ்வாமி சிறுவனை மன்னிக்க வேண்டும், ஒன்றையும் மனதில் வைக்கலாகாது’ என்று கெஞ்சினார். தீர்ந்து போச்சு. ஐயர் கோபம் தணிந்ததோ தணியவில்லையோ அப்போது ஒன்றும் தோன்ற வில்லை. கிழவர் பையனைத் தனிமையில் கூப்பிட்டு, ‘என்னடா வரவரப்புத்தி உனக்குக் கெட்டுப் போய்விட்டது’ என்றார்.

பையன் - ‘எனக்கும் 40 வயது ஆகப்போகிறது. 16 வயதுள்ள பையனுக்கு நான் தந்தை. ஏதோ ஊரில் உலகில் பத்துப்பேரிடம் மரியாதையாய்க் காலந் தள்ளியாக வேண்டும். எப்போது பார்த்தாலும் இந்தப் பிராமணன் என்னை வாடா, போடா என்கிறான். ஏதோ உங்களுக்குப் பிடிக்கிறது. எனக்கு அதெல்லாம் சரிப்படாது. சுயமரியாதைக்குப் பங்கம் வர அவன் பேச நான் அவனிடம் கையேந்தி நிற்கப் போவதில்லை. கையேந்தும் காலம் வந்தாலும் மனிதனுக்கு மனிதன் இழிவுபடுத்துவதை எப்படிச் சகிப்பது.’

கிழவர். ‘உம் வீட்டுப் புரோகிதர் பிராமணர். அவர் ஒன்று சொன்னால் அப்படியே பலித்துவிடும் அடடா என்ன புத்தியடா இதெல்லாம் என்ன கேடு காலத்திற்கோ’

## அத்தியாயம் – 2

மேல் அத்தியாயம் நடந்து எண்ணிப் பத்து தினங்கள் ஆக வில்லை. கிழவர் வீடு அழுகுரலால் நிரம்பிற்று. சிங்காரம் பிள்ளை மனைவியின் துயரம் சொல்லி முடியாது. சிங்காரப் பிள்ளையின் பிள்ளைகள் அலறுகின்றன. வீட்டுக் கிழவி சிங்காரம் பிள்ளையின் தாய் வயது வந்த தன் ஒரு பிள்ளையைப் பறிகொடுத்தேனே என்று வாயிலும் வயிற்றிலும் அறைந்து கொண்டாள். சிங்காரப்பிள்ளை குற்றாலத்து அருவியில் வீழ்ந்து விட்டார் என்று சிங்காரப் பிள்ளையின் நண்பர் வந்து கிழவரிடம் சொல்லியதுதான். கிழவர் ‘ஐயோ ஐயர் வாக்குப் பலித்ததே’ என்று மூர்ச்சையானவர் மூர்ச்சையானவரே, இதைக் கேள்விப்பட்ட அக்கம் பக்கத்தார்கள் ‘பொதுமக்களின் பணத்தால் குருகுலம் ஸ்தாபித்து ஒருசார் மக்களையே உயர்த்தப் பார்த்த ஐயரை விழுங்கிய அருவி, ஒரு பாவத்தையும் அறியாத சிங்காரப்பிள்ளையை ஏன் தன் அகட்டில் மறைத்தது? என்று வருந்தினர்.’

மற்றும் சில உறவினர் சிங்காரப்பிள்ளைக்குத் தண்ணீர்த் தத்து இருப்பதாக மாத்திரம் சோசியர் சொல்லியிருந்தார். ஆக, சரியாய் முடிந்தது என்றார்கள்.

பிரேதம் தேடப்போன ஆட்கள் அகப்படவில்லை என்று சொல்லிவிட்டார்கள். மறுநாளும் சென்றது. பல நாட்கள் போயின சிங்காரப் பிள்ளையின் மனைவி மாங்கிலியம் இழந்தாள். வெள்ளை உடுத்தினாள். புஷ்பம் இழந்தாள். மஞ்சள் குங்குமம் இழந்தாள். இறந்தவர்க்காகச் செய்யும் கிரியைகள் சம்பர்பமாய்ச் செய்யப்பட்டது. ஐயரின் சாபதுக்ர சக்தி ஆஸ்திக சங்கத்தாருக்கும் ஓர் எடுத்துக் காட்டாகத் திகழ்ந்தது.

## அத்தியாயம் – 3

'பொய்யாய்க் கனவாய்ப் பழங்கதையாய் மெல்லப் போனதுவே' (பட்டினத்தார்)

சிங்காரப்பிள்ளை இறந்த தலைத் திதியும் வந்துவிட்டது. தாய் தந்தையர்க்குச் சிங்காரப்பிள்ளை தலைப்பிள்ளையும் ஒரு பிள்ளையுமாகையால் திதியை இலேசாய் நடத்திவிடக் கிழவர் சம்மதிக்கவில்லை. வீட்டுப் புரோகிதரான ஐயரைக் கிழவர் அழைத்தார். திதிக்குத் திட்டம் போட்டார். "100 பிரமணோத்தமர்கட்கு சோமன், அங்கவஸ்திரம், குடை, பாதை குறடு, விசிறி, செம்பு மணை இவைகள் தயார் செய்யுங்கள். 100 பேருக்கும் இயன்ற அளவு சொர்ண தானம் நடக்க வேண்டும். 5 பேருக்குக் கோ (பசு) தானம் நடந்தாலே போதும் ஏரியுட்வாயிலுள்ள நஞ்சையில் ஒரு காணி (எனக்கு) வீட்டுப் புரோகிதருக்குப் பூதானம் கொடுத்தால் போதும். இதுதான் வேறொன்று மில்லை. பையன் பிராமணனை நிந்தித் திருந்தான். கேவலம் பன்றி நாயாய்தான் அவன் பிறந்து கஷ்டப் படுவான். என்ன செய்கிறது? மேற்சொல்லிய காரியம் சரிவர நடந்தால் ஒருவாறு மீளுவான் என்று சாத்திரம் சொல்லுகிறது. மற்றபடி நானாக ஒன்றும் சொல்லவில்லை" என்று ஐயர் சொன்னார்.

திங்கட்கிழமை நெருங்கிற்று. எல்லாம் தயாரில் இருந்தன. உள்ளூர் அயலூர்ப் பிராமணோத்தமர்கள் முதல்நாளே திதி நடக்கும் வீட்டை முற்றுகையிட்டனர். திங்கள் காலை மலர்ந்தது. தெரு நிறைய பிராமணோத்தமர்கள் கேசவப்பிள்ளை வீட்டுத் திதியில் பிதற்றும் மந்திரங்கள் பேரோசையோடு முழங்குகிறது. பிள்ளை வீட்டில் அயலூர் உறவின் முறையார் கூட்டம் சொல்லி முடியாது. அதில் ஒரு கிண்டல் காரக் கிழவன்வந்து தொலைந்தான். வீட்டுப் புரோகிதர் கிரியை ஆரம்பித்தார். ஐயர் எதிரில் மலைமலையாய் அரிசிக் குவியல்; பால், தயிர், கோமயம், பரிவாரம், மரக்கறிகள், தானப் பொருள்கள், மந்திர முழக்கம், சம்பாரமம்! சமப்பரமம்!! கிழவர், இறந்தவனின் மனைவி, கிழவி மற்றவர்களும் இருந்தார்கள். இறந்தவர் மகன் திதி கொடுக்கப் பக்தி சிரத்தையாய் எதிரில் உட்கார்ந்திருந்தான். ஐயர் சாணிப் பிள்ளையார் பிடித்து வைத்து அதற்கு ஓர் மந்திரத்தால் உருக் கொடுத்தார்.

கிழவர் : ஏன் சாமி பிள்ளையார் உரு - சத்தி அதில் வந்திருக்குமே?

ஐயர் : ஆஹா!

கிழவர் : ஏன் சுவாமி மற்றும் கிரியை நடந்து கொண் டிருக்கையில் செம்பு ஜலத்தில் சிந்து, கங்கை, யமுனா முதலிய ஜலம் வந்திருக்குமே?

ஐயர் : மற்றெதற்கு மந்திரம்?

ஐயர் மங்குப் பிரதிஷ்டை செய்த மூர்த்திகளுக்கு அர்ச்சிக்கச் சொர்ண புஷ்பம் கேட்கிறார்.

கிழவர் : சுவாமி இங்கு நதியையெல்லாம் கொண்டுவந்த, சாணியிலும் மஞ்சளிலும் மூர்த்திகளையெல்லாம் உண்டாக்கிய மந்திரம் இந்தப் புஷ்பத்தைச் சொர்ண புஷ்பமாய் ஆக்க முடியாதோ?

ஐயர் : என்ன நீர் கிண்டல் செய்கிறீரா ஓய்... (கிழவர் முதலியவர் விழிக்கிறார்கள். இந்தக் கிழவர் யார் என்பதை அப்போது தான் நிதானிக்கிறார்கள்)

தானங்கள் இறந்தவற்குப் பிரீதி செய்யப்படுகிறது.

கிழவர் : இவையெல்லாம் இறந்தவற்குப் பிரீதியாகுமோ? அங்குப் போய்ச் சேருமோ? ஏன் சுவாமி! அவர் வாங்கிக் கொண்ட தாய்ப் பதில் எங்கட்குப் எப்போது வரும்?

ஐயர் : (கோபமாய்) ஓய் சும்மாயிருக்க மாட்டீர்? இறந்தவனா பதில் எழுதி விடுவான். அவன் நாயாகவோ பன்றியாகவோ எங்குத் தவிக்கிறானோ?

கிழவர் : இவ்வளவு மந்திரம் கற்றவர் அவரை (இறந்த வரை) வரவழைக்கிறதுதானே?

ஐயர் : இறந்து தொலைந்தவன் உங்கள் அப்பன் காலத்தில் வருவானாங் காணும்.

கிழவர் : இதோ நான் வந்திருக்கிறேனே?

ஐயர் : நீரா?

**கிழவர்** : தம் பொய்த்தாடியை எடுத்து இறந்துபோன சிங்காரம் பிள்ளையாய் நின்றார். அவர் கையிலிருந்த தடியை இன்னும் அவர் ஓங்க வில்லை. புருவம் மாத்திரம் நெற்றியில் ஏறிற்று.

ஐயர் : ஓட்டம் – அனைவரும் ஓட்டம் – இழக்க வந்த தானம் மீண்டது. கிழவருக்கு மகன் வந்தான். மனைவிக்கு நாயகன் வந்தான். பிள்ளைக்கு தந்தை வந்தார். சிங்கப்பூருக்குப் போயிருந்த சிங்காரம் பிள்ளையை அவர் நண்பர் அடைந்தார்.

*சுயமரியாதைத் தொண்டன்*, (ஈரோடு, **6.7.1929**), ப. **17**;
வெளியிடுவோர்: பி. சாமிநாதன்,
அச்சகம்: சென்ட்ரல் அச்சகம், ஈரோடு.

◆ ◆ ◆